வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – நாராயணசாமி

தேதி 13.8.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்தியா செமி கண்டக்டர் துறையில் விரைவான முன்னேற்றங்களை அடைந்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இல்லந்தோறும் மூவர்ண தேசிய கொடி இயக்கம் ஹர்கர் திரங்கா மிகப் பெரிய மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

போலி உரங்களையும், ரசாயணங்களையும் தயாரிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் சுதந்திர தின விழாவை ஒட்டி, காவல்துறை மற்றும் பள்ளி மாணவ மாணவிகளின் இறுதி அணிவகுப்பு ஒத்திகை கடற்கரை சாலையில் நடைபெற்றது.

மோடி 1 (19)

இந்தியா செமி கண்டக்டர் துறையில் விரைவான முன்னேற்றங்களை அடைந்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். நேற்று பிரதமர் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை

கூட்டத்தில், 4 ஆயிரத்து 594 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒடிசா, பஞ்சாப் மற்றும் ஆந்திர பிரதேசத்தில் 4 புதிய செமி கண்டக்டர் உற்பத்தி ஆலையை தொடங்குவதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்ட நிலையில் பிரதமர் இது குறித்து சமூக ஊடகப் பதிவில் கருத்து தெரிவித்துள்ளார். செமி கண்டக்டரின் டிஜிட்டல் மேம்பாடு மற்றும் உலகளாவிய கண்டுபிடிப்புகளை செயல்படுத்துவதற்கான ஒரு வலுவான சுற்றுச்சூழல் அமைப்பை இந்தியா உருவாக்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஆந்திரா, ஒடிசா மற்றும் பஞ்சாப்பில் புதிய செமி கண்டக்டர் உற்பத்தி ஆலைகளுக்கு ஒப்புதல் அளித்த மத்திய அமைச்சரவையின் முடிவால் இந்த மாநிலங்களில் உயர் திறன் கொண்ட வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும், உலகளாவிய விநியோக சங்கிலியில் இந்தியாவின் பங்களிப்பு ஒரு முக்கியமான இடத்தை வகிக்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். அருணாச்சல பிரதேசத்தில் 700 மெகாவாட் நீர் மின் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருப்பது முக்கியமான நடவடிக்கை என்றும், இது அருணாச்சல பிரதேச மாநிலத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் என்றும் தெரிவித்துள்ளார்.

*அமித் ஷா* 1(9)

இல்லந்தோறும் மூவர்ண தேசிய கொடி இயக்கம் ஹர்கர் திரங்கா மிகப் பெரிய மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று தமது இல்லத்தில் தேசிய கொடியை அவர் ஏற்றி வைத்தார்.

பின்னர் இது தொடர்பாக சமூக ஊடகப் பதிவில், இல்லந்தோறும் தேசிய கொடி இயக்கம் ஒற்றுமை என்ற நூல் மூலம் தேசத்தை இணைத்து, தேசப் பற்றை மக்களிடையே வலுப்படுத்தி வருவதாக குறிப்பிட்டார். நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் ஹர்கர் திரங்கா பிரச்சாரம் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு

**வாய்ஸ்**

அமித் ஷா 2 (17)

**(வாய்ஸ்)**

உத்தரபிரதேசத்தில் அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் லக்னோவில் உள்ள தனது அதிகாரபூர்வ இல்லத்தில் இன்று ஹர்கர் திரங்கா பிரச்சாரத்தை தொடங்கினார். லக்னோவில் பல்வேறு வீதிகளின் வழியாக சென்ற ஹர்கர் திரங்கா பேரணியில் முதலமைச்சருடன், அமைச்சர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். பஞ்சாபில் ஜலந்தர் மற்றும் மாநிலத்தின் பிற இடங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள மத்திய ஆயுத காவல் படையினரும் இன்று பொதுமக்களுடன் இணைந்து ஹர்கர் திரங்கா பேரணிகளை நடத்தினர். எல்லை பாதுகாப்பு படையினர் தேசபக்தி செய்தியை பரப்பும் வகையில் அமிர்தசரசில் உள்ள அடாரி எல்லையில் இருந்து சப்பல் சாலை வரை மோட்டார் சைக்கிள் பேரணியை நடத்தினர். திரிபுரா மாநிலம் அகர்தலாவில் உள்ள அழகிய உஜ்ஜயந்தா அரசு அரண்மனையில்

நடைபெற்ற ஹர்கர் திரங்கா பேரணியில் அம்மாநில முதல்வர் டாக்டர் மாணிக் சாஹா கலந்து கொண்டார். ஜம்மு காஷ்மீரில் கதுவா மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற்ற ஹர்கர் திரங்கா பேரணியில் மாணவர்கள் பங்கேற்றனர். தமிழகத்தில் விழுப்புரம் தலைமை அஞ்சலக ஊழியர்கள் சார்பில் தேசிய கொடி பேரணி இன்று நடைபெற்றது.

*மன் கீ பாத்* (9)

பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகாஷ்வாணி வழியே மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும் மன் கீ பாத் நிகழ்ச்சி இம்மாதம் 31 ஆம் தேதி ஒலிபரப்பாக உள்ளது. இது, மனதின் குரல் நிகழ்ச்சியின் 125 ஆவது பகுதியாகும். இந்நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டிய கருத்துக்களை பொதுமக்கள் பகிர்ந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. 1800-11-7800 என்ற கட்டணமில்லா தொலைபேசி வழி மூலமாகவோ, நரேந்திர மோடி செயலி அல்லது மை கவ் இணையதளம் வழியாகவோ பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை இம்மாதம் 29 ஆம் தேதி வரை பகிர்ந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

*டெல்லி சுதந்திர தினம் 1* (7)

ஆகஸ்ட் 15 ஆம் தேதி நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்தை முழு உற்சாகத்துடனும், தேசபக்தி உணர்வுடனும் கொண்டாடுவதற்கு நாடு தயாராகி வருகிறது. சுதந்திர கொண்டாட்டங்களுக்கு முன்னதாக நாடு முழுவதும் ஹர்கர் திரங்கா பிரச்சாரத்தில் மக்கள் தீவிரமாக பங்கேற்று வருகின்றனர். சுதந்திர தினத்தன்று எவ்வித அசம்பாவிதமும் இல்லாமல், பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் டெல்லி காவல் துறை விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது. இது குறித்த ஒருசெய்தித் தொகுப்பு

**வாய்ஸ்**

*டெல்லி சுதந்திர தினம்* 2(12)

**வாய்ஸ்**

டெல்லியில் சுதந்திர தின விழாவை ஒட்டி, காவல் துறையினருடன் துணை ராணுவப் படைகள் மற்றும் காமாண்டோக்கள் உட்பட ஆயிரக்கணக்கான வீரர்கள் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். சுதந்திர தின விழாவில் பொதுமக்கள் கலந்து கொள்ள வசதியாக டெல்லி மெட்ரோ ரயில் அதன் அனைத்து வழிதடங்களிலும் அதிகாலை 4 மணிக்கு தனது சேவையை தொடங்குகிறது. இந்தாண்டு டெல்லியில் நடைபெறும் சுதந்திர தின விழாவில் 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த சிறப்பாக செயல்பட்ட 210 பஞ்சாயத்து தலைவர்கள் சிறப்பு

விருந்தினர்களாக கலந்து கொள்ள உள்ளனர். பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் நாளை புதுடெல்லியில் பஞ்சாயத்து தலைவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது. இதில் செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் சபாசார் செயலி அறிமுகம் செய்யப்பட உள்ளது.

*சிவராஜ் சிங் சவுகான்* (11)

போலி உரங்களையும், ரசாயணங்களையும் தயாரிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் வகையில் புதிய சட்டத்தை மத்திய அரசு விரைவில் கொண்டு வர உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் விவசாய அமைப்புகளை சேர்ந்த தலைவர்கள் மற்றும் சாகுபடியாளர்களுடன் கலந்துரையாடிய அமைச்சர், விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படுவதாக தெரிவித்தார். முன்னதாக, அமைச்சருடன் கலந்துரையாடிய விவசாயிகள், வெளிநாட்டு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் துணிச்சலுடன் வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திய பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவிப்பதாக கூறினார்.

*அணிவகுப்பு ஒத்திகை* (15)

புதுச்சேரியில் ஆகஸ்ட் 15 ஆம் தேதி நடைபெற உள்ள சுதந்திர தின விழாவை ஒட்டி, காவல்துறை மற்றும் பள்ளி மாணவ மாணவிகளின் இறுதி அணிவகுப்பு ஒத்திகை இன்று கடற்கரை சாலையில் நடைபெற்றது. அதனை தொடர்ந்து பள்ளி மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இதற்கிடையே, சுதந்திர தினத்தை ஒட்டி, ஆகஸ்ட் 15 ஆம் தேதி புதுச்சேரி மாநிலம் முழுவதும் ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் அறிவித்துள்ளார்.

காரைக்கால் மாவட்டத்தில், சுதந்திர தின விழா நடைபெற இருந்த காரைக்கால் விளையாட்டு அரங்கம் மழை காரணமாக விழா நடத்த உகந்ததாக இல்லாததால், காரைக்கால் கடற்கரை சாலையில் சுதந்திர தின விழா நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதனை ஒட்டி, அக்கடற்கரை சாலையில் இறுதி அணிவகுப்பு ஒத்திகை மற்றும் மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

ஏனாமில், ஜிஎம்சி பாலயோகி அரங்கில் இன்று காலை சுதந்திர தின இறுதி அணிவகுப்பு ஒத்திகை நடைபெற்றது.

*பிரிவினை நிகழ்ச்சி* (11)

இந்திய பிரிவினையின் வரலாற்று வலியை நினைவு கூறும் வகையிலான நிகழ்ச்சி இன்று புதுச்சேரி முருகப்பாக்கத்தில் உள்ள

இந்திராகாந்தி தேசிய கலை மையத்தில் நடைபெற்றது. இந்திய கலாச்சார அமைச்சகத்தின் அனுமதியுடன் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், புதுச்சேரி சுகாதாரத் துறை செயலர் திரு ஜெயந்த் குமார் ரே சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் புதுச்சேரி இந்திராகாந்தி தேசிய கலை மையத்தின் இயக்குநர் திரு சுமித் டே, ஸ்ரீ அரவிந்தோ ஆராய்ச்சி மைய இயக்குநர் டாக்டர் ஆனந்த ரெட்டி, பாரத சக்தி இயக்குநர் டாக்டர் பெலு மெஹ்ரா ஆகியோரும் கலந்து கொண்டு இந்திய பிரிவினை குறித்து பல்வேறு தகவல்களை எடுத்து கூறினர். இந்நிகழ்ச்சி குறித்து இந்திராகாந்தி தேசிய கலை மையதை சேர்ந்த திரு எஸ் பரதலிங்கம் கூறுகையில்.

**வாய்ஸ்**

தடகளம் (6)

ஹங்கேரியின் புடாபெஸ்டில் நடைபெற்ற ஆண்களுக்கான 3 ஆயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் இந்தியாவின் குல்வீர் சிங் தனது முந்தைய தேசிய சாதனையை முறியடித்துள்ளார். இந்த ஆண்டு பிப்ரவரியில் பாஸ்டனில் நடைபெற்ற தடகள போட்டியில் 3 ஆயிரம் மீட்டர் தூரத்தை 7 நிமிடங்கள் 38.26 விநாடிகளில் கடந்தார். தற்போது, 7 நிமிடங்கள் 34.49 விநாடிகளில் 3 ஆயிரம் மீட்டர் தூரத்தை கடந்துள்ளார்.

வானிலை (7)

தென்னிந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக இன்றும் நாளையும் தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இப்பகுதிகளின் ஒரு சில இடங்களில் மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலான பலத்த தரைக்காற்று வீசுவதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.